# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.53 (L.W.82)

| | |
|---|---|
| Name | R. Chandrasekaran |
| Father/Husband Name | P.Ramasamy |
| Calling/Occupation | ADSP |
| Age | 55 |
| Address | Police Academy, Oonamancheri, Chennai. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.07.2025.

(A1, A2, A4 to A6 Present. A3 absent. And his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.50 P.M.**

நான் தற்போது சென்னை ஊடமாஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 18.01.2016 முதல் பிப்ரவரி 2018 வரை வேலூரில் உள்ள குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறையில் துணைக்காவல் கண்காணிப்பாளராக பணியாற்றினேன்.

27.06.2015-ம் தேதி 00.15 மணிக்கு ஆம்பூரைச் சேர்ந்த அலி அக்பர் என்பவர் பள்ளிக்கொண்டா காவல் நிலைய வட்ட பொறுப்பு ஆய்வாளரான கோவிந்தசாமியிடம் இந்த வழக்கில் இறந்துபோன

ஆம்பூரை சேரந்த அலி அக்பர் என்பவர் ஆஜராகி தனது சகலையான கௌஷ் பாஷாவின் மருமகனான ஷமீல் பாஷாவும் பவித்ராவும் பரிதா ஷு கம்பெனியில் ஒன்றாக வேலை பார்த்ததாகவும் ஷமீல் பாஷா ஈரோட்டில் உள்ள கல்யாண் ஜுவல்லரியில் வேலை பார்த்தபோது அங்கு சென்ற பவித்ராவை அவரது பெற்றோர் கேட்டுக்கொண்டபடி திருப்பி அனுப்பி வைத்ததாகவும் பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் மற்றும் காவலர்கள் சபாரத்தினம், நாகராஜ், ஐயப்பன், முனியன், சுரேஷ் மற்றும் முரளி ஆகியோர் கொடுமையான முறையில் அடித்து சித்தரவதை செய்து அதனால் மேல் சிகிச்சையில் சென்னை இராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் இருந்த ஷமீல் பாஷா 26.06.2015 அன்று மாலை இறந்துவிட்டதாகவும், அதற்கு காரணமான மேற்படி காவல் அலுவலகர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கொடுத்த புகாரை பெற்று காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015, பிரிவு 176 கு.வி.மு.ச படியாக வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டும் உத்தரவின்படி 01.07.2015 அன்று வேலூர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் பொறுப்பில் இருந்த ஆனந்தகுமார் குற்ற எண் 5/2015, பிரிவு 176 கு.வி.மு.ச. படியாக மறு வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு என்னிடம் 21.01.2016 அன்று வழக்குக்கோப்பை ஒப்படைத்ததை நான் பெற்று பார்வையிட்டேன்.

மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 09.02.2016 அன்று காலை 11.00 மணிக்கு எதிரி சபாரத்தினம் என்பவரையும், காலை 11.40 மணிக்கு எதிரி நாகராஜினிடமிருந்தும்,

அன்று 12.30 மணிக்கு எதிரி ஐயப்பனமிடமும், 13.15 மணிக்கு எதிரி முரளியிடமிருந்தும், 14.45 மணிக்கு எதிரி முனியனிடமிருந்தும், பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோவும் ஒப்படைப்பு மகசரில் தனித்தனியாக பெற்றேன். அந்த ஒப்படைப்பு மகசரில் நானும் சம்பந்தப்பட்ட எதிரியும் கையொப்பம் செய்தோம்.

நாகராஜன் என்பவரின் ஒப்படைப்பு மகசர் அ.த.சா.ஆ.100. ஐயப்பன் என்பவரின் ஒப்படைப்பு மகசர் அ.த.சா.ஆ.101. முரளி என்பவரின் ஒப்படைப்பு மகசர் அ.த.சா.ஆ.102. முனியன் என்பவரின் ஒப்படைப்பு மகசர் அ.த.சா.ஆ.103. சபாரத்தினம் என்பவரின் ஒப்படைப்பு மகசர் அ.த.சா.ஆ.104. 10.02.2016 அன்று 12.30 மணிக்கு எதிரி சுரேஷ் ஆஜர் செய்த பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோவை ஒப்படைப்பு மகசரில் பெற்றுக்கொண்டேன். அந்த ஒப்படைப்பு மகசர் அ.த.சா.ஆ.105.

எதிரி சபாரத்தினத்தின் ஒப்படைப்பு மகசரில் இணைக்கப்பட்டுள்ள மேற்படி சபாரத்தினத்தின் பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோ அ.த.சா.ஆ.106. 3ம் எதிரி நாகராஜனின் ஒப்படைப்பு மகசரில் இணைக்கப்பட்டுள்ள நாகராஜனின் பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோ அ.த.சா.ஆ.107. 2ம் எதிரி ஐயப்பனின் ஒப்படைப்பு மகசரில் இணைக்கப்பட்டுள்ள ஐயப்பனின் பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோ அ.த.சா.ஆ.108.

5ம் எதிரி முரளியின் ஒப்படைப்பு மகசரில் இணைக்கப்பட்டுள்ள முரளியின் பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோ அ.த.சா.ஆ.109. 7ம் எதிரி முனியனின் ஒப்படைப்பு மகசரில் இணைக்கப்பட்டுள்ள முனியனின் பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோ அ.த.சா.ஆ.110.

10.02.2016–ம் தேதி எதிரி சுரேஷ் ஆஜர்படுத்திய ஒப்படைப்பு மகசரில் உள்ள பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோ அ.த.சா.ஆ.111. 15.02.2016 அன்று முதல்வர், இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை அவர்களுக்கு 12.02.2016–ம் தேதியிட்ட கடிதத்தில் ஷமீல் பாஷாவிற்கு மேற்படி மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சையின் விவரம், அது தொடர்பான மருத்துவமனை பதிவேடுகள், சிகிச்சை ஆவணங்கள், சிகிச்சை அளித்த மருத்துவர்களின் பெயர்களை வழங்கக்கோரி கடிதம் வழங்கினேன்.

05.03.2016 அன்று சாட்சி சிவா என்கிற சிவசங்கரை விசாரித்து பிரிவு 161 கு.வி.மு.ச–வின்படி மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அப்போது சிவா என்கிற சிவசங்கர் ஷமீல் பாஷாவை அடித்து துன்புறுத்தியதாக நான் காட்டிய பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்களின் ஜெராக்ஸ் நகலை பார்த்து அடையாளம் காட்டி அதற்காக கையொப்பம் செய்தார்.

அவர் காவல் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ், காவலர்கள் முனியன், ஐயப்பன், நாகராஜ், சுரேஷ், சபாரத்தினம், முரளி ஆகியோர்களை அடையாளம் காட்டினார். அதேபோல் ஷமீல் பாஷா புகைப்படத்தைப் பார்த்து காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் அடித்து துன்புறுத்திய நபர் இவர்தான் என்று அடையாளம் காட்டினார். அதற்காக சாட்சி சிவா என்கிற சிவசங்கர் கையொப்பம் செய்துள்ளார். அதற்கான ஆவணங்கள் அ.த.சா.ஆ.12, 13, 14 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

08.03.2016 அன்று சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் முதுநிலை மருத்துவ ஆவண அலுவலரிடமிருந்து இறந்துபோன ஷமீல் பாஷாவிற்கு மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை வழுங்கப்பட்டதற்கான ஆவணங்களை அவரது கடிதத்துடன் பெறப்பட்டது. அந்த ஆவணங்கள் ஏற்கனவே அ.த.சா.ஆ.53, 56, 57, 65 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

09.03.2016 அன்று சாட்சி அருணாச்சலம் என்ற அருண்–ஐ விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அப்போது அவரிடம் காட்டப்பட்ட எதிரிகள் மற்றும் இறந்துபோன ஷமீல் பாஷாவின் போட்டோ ஜெராக்ஸ் நகல்களை பார்த்து எதிரிகளையும், இறந்துபோன ஷமீல் பாஷாவையும் அடையாளம் காட்டி அதற்காக அந்த ஜெராக்ஸ் நகலில் அவர் கையொப்பம் செய்தார். அந்த ஆவணம் ஏற்கனவே அ.த.சா.ஆ.9, 10, 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12.03.2016 அன்று சாட்சிகள் நேரு, மருத்துவர் சதீஷ்குமார் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியாக பிரிவு 161(3) கு.வி.மு.ச.–ன்படி வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி மருத்துவர் சதீஷ்குமார் வழங்கிய ஷமில் பாஷாவின் Death Report என்னிடம் காட்டப்படுவதுதான், அது அ.த.சா.ஆ.112.

30.03.2016 மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி அவர்களை பிரிவு 161(3) கு.வி.மு.ச.–ன்படி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 31.03.2016 அன்று சென்னை மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவத்துறை அலுவலகம் சென்று மருத்துவர் வேதநாயகம் அவர்களிடமிருந்து இறந்துபோன ஷமீல் பாஷா என்பவரின் உடல் மீதான பிரேத பரிசோதனை தொடர்பான இறுதி அறிக்கையின்

சான்றிட்ட நகல் பெற்றேன். தொடர்ந்து மருத்துவர்கள் வேதநாயகம், காவலர் நரேந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்று மருத்துவர்கள் மகாதேவன், முகமது ஷமீர், ராஜ்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

19.04.2016 அன்று காவல் ஆய்வாளர் கோவிந்தசாமியையும், 27.04.2016 அன்று ஆம்பூர் துணைக்காவல் கண்காணிப்பாளராக இருந்த கணேசன் என்பவரையும், 28.04.2016 அன்று மருத்துவர் மாலாவினையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

04.05.2016 அன்று மருத்துவர் வேதநாயகத்திற்கு இறந்துபோன ஷமீல் பாஷாவின் இறப்பிற்கான உண்மைக்காரணம் அறியும் பொருட்டு கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டி கடிதம் அனுப்பினேன். அந்த கடிதத்தின் மீது மேற்படி மருத்துவர் வேதநாயகம் அவர்கள் பதில் அளித்த கடிதம் 26.05.2016 அன்று பெறப்பட்டது. அந்த பதில் கடிதத்தில் மருத்துவர்கள் வேதநாயகம், ராமலிங்கம், நரேந்திரன் ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள்.

அந்த பதில் கடிதத்தில் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காயங்களின் வயது யாது என்ற கேள்விக்கு ஏழு முதல் பத்து நாட்கள் வரை என்றும், பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காயங்களும் ஒரே நேரத்தில் ஏற்பட்டவையா என்ற கேள்விக்கு அனைத்து காயங்களும் ஒரே நேரத்தில் ஏற்பட்டவைதான் என்றும், மேற்படி காயங்கள் எவ்விதமாக, எதனால் ஏற்பட்டிருக்கலாம் என்ற கேள்விக்கு மழுங்கிய

பொருட்களினால் தாக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றும், ஏதேனும் ஆயுதங்கள் உபயோகப்படுத்தப்பட்டதால் மேற்படி காயங்கள் ஏற்பட்டிருக்குமா என்ற கேள்விக்கு மழுங்கிய பொருள் என்றும், மேற்படி காயங்களால் ஷமீல் பாஷா இறந்துள்ளாரா என்ற கேள்விக்கு மேற்படி காயங்களின் விளைவாக ஒரு வாரத்திற்கு பின்னர் ஒரு நபர் இறக்க வாய்ப்பு உள்ளதா, ஆம் எனில் எவ்வாறு என்ற கேள்விக்கு ஆம் என்றும், கல்லீரலில் ஏற்பட்ட காயம் மற்றும் உடலில் பல்வேறு இடங்களில் உள்ள கன்றிய காயங்களினால் ஏற்பட்ட பக்க விளைவுகள் காரணமாக அவர் இறந்திருக்க கூடும் என்றும், மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிராய்ப்பு மற்றும் கன்றிய காயங்கள் சாதாரண காய வகையை சார்ந்தவையாக என்ற கேள்விக்கு சிராய்ப்பு காயங்கள் சாதாரண வகையை சார்ந்தது என்றும், கன்றிய காயங்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதால் கொடுங்காயமாக மாற வாய்ப்பு உண்டு என்றும், மேற்படி காயங்கள் ஏற்பட்டிருக்காவிடில் ஷமீல் பாஷா இறந்திருக்க வாய்ப்பு உண்டா என்ற கேள்விக்கு இல்லை என்றும் அதில் பதிவு அளிக்கப்பட்டது. அந்த ஆவணம் ஏற்கனவே அ.த.சா.ஆ.62 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

23.06.2016 அன்று சாட்சி ஏழுமலை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.06.2016 அன்று நீதித்துறை நடுவர் எண்.5, வேலூர் அவர்களிடமிருந்து ஷமீல் பாஷா இறப்பு தொடர்பான பிரேத விசாரணை அறிக்கையின் நகல் அந்த தேதியில் எங்கள் காவல் கண்காணிப்பாளர் கடிதத்துடன் எனது அலுவலகத்தில் பெறப்பட்டது.

01.07.2016 அன்று சாட்சி ஜகீர் அகமது என்ற ஜாகீர் அகமதுவையும், 04.07.2016 அன்று சாட்சி கருணாநிதியையும், 06.07.2016 அன்று சாட்சி சரவணனையும், 08.07.2016 அன்று சாட்சிகள் சிவக்குமார், இர்பான் என்ற இர்பான் அகமதுவையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

அன்றைய தினம் என் விசாரணையை முடித்து முடிவு அறிக்கையை சென்னை வடக்கு மண்டல குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்பு எங்கள் தலைமையகத்திற்கு எதிரிகள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு இசைவாணை வழங்கக்கேட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டதின் பெயரில் வேலூர் சரக காவல் துணைத்தலைவர் அவர்களிடமிருந்து எதிரி மார்டின் பிரேம்ராஜ்–க்கான கடிதம் சிபிசிஐடி, டிஐஜி அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் C.No.B2/9553/2016, dated 13.01.2017. அந்த கடிதம் அ.த.சா.ஆ.113.

C.No.H1(2)/030577/2016, dated 27.01.2017 படியாக வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனுப்பிய எதிரிகள் ஐயப்பன், நாகராஜன், சபாரத்தினம், முரளி ஆகியோருக்கான கடிதம் அ.த.சா.ஆ.114. அதேபோல திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எதிரிகள் முனியன் மற்றும் சுரேஷ் ஆகியோருக்காக அனுப்பப்பட்ட C.No.G1/28534/2016, dated 18.05.2017 படியாக வழங்கப்பட்ட கடிதம் அ.த.சா.ஆ.115.

அந்த கடிதங்களில் எதிரிகள் பணியின்போது குற்றச்செயலில் ஈடுபடவில்லை என்றும், பணிக்கு அப்பாற்பட்டு குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளதால் நேரடியாகவே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்பு எதிரிகள் பிரிவு 147, 342, 323, 304(ii) இ.த.ச மற்றும் 304(ii) இ.த.ச உடன் இணைந்த 149 இ.த.ச.–ன்படி குற்றம் செய்துள்ளது தெரிய வந்ததால் இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.116. பின்பு 26.05.2017 அன்று எதிரிகள் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் படி எனது இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கே: பிரிவு 147 இ.த.ச. கூறுவது என்ன என்றால்?

ப: Unlawful assembly ஆகும்.

கே: Whether the offences said to be committed/charges levelled in the charge sheet by the accused on the part and parcel of their official duty or on private affairs?

ப: எதிரிகள் பவித்ராவின் இருப்பிடத்தை தெரிந்துக்கொள்வதற்காக விசாரித்துள்ளார்கள். அந்த விசாரணையில் காவல் ஆய்வாளர் காவலர் குடியிருப்பில் வைத்து இறந்துபோன ஷமீல் பாஷாவை விசாரித்துள்ளதால் சட்டத்திற்கு விரோதமாக காவலில் வைத்து எந்த ஒரு காவல் நிலைய ஆவணங்களில் பதிவுகள் செய்யாமல் அவரது சட்டப்பூர்வமான அலுவலுக்கு விரோதமாக

விசாரித்துள்ளதால் தனிப்பட்ட முறையில் விசாரித்துள்ளதாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும்.

கே: Kindly see the charge sheet item B nature of information first para?

ப: A1 C.Martin Premraj, S/o. Charless David, Inspector of Police Prohibition Enforcement Wing, Vaniyambadi (Under suspension) worked as Inspector of Police, Pallikonda Police Station, Vellore district from 08.02.2014 to 22.06.2015 F.N.

கே: What does it mean from the averement saying that "Worked as Inspector of Police, Pallikonda Police Station from 08.02.2014 to 22.06.2015 F.N." when the period of offence said to be committed is covering between 08.02.2014 to 22.06.2015?

ப: During that period the offence has been committed.

கே: Have you filed and marked the suspension order of A1 to say that he was not working as Inspector of Police, Pallikonda Police Station?

ப: Suspension order has not been filed as documents.

கே: Have you stated the date of suspension in your Charge sheet?

ப: Yes. Mentioned in my charge sheet. He was suspended on 28.06.2015 vide suspension order of the DIG, Vellore Range in C.No.B2/008307/2015, R.O.No.220/2015, Dated 28.06.2015 in Page no.9 para 5 of the nature of the information in the charge sheet.

கே: If so do you agree that the A1 Martin Premraj was on duty up to 27.06.2015?

ப: No. Till 22.06.2015 he worked at Pallikonda Police Station.

கே: What is the date of occurrence?

ப: 17.06.2015 from 16.00 hours to 19.06.2015 till 10.00 hours morning.

கே: If so do you agree that during that period what you have stated above (Martin Premraj A1 was on duty as Circle Inspector of Police at Pallikonda Police Station)?

ப: Yes. He was on duty.

கே: When you have admitted that the A1 Martin Premraj was on duty whether the sanction to prosecute him is mandatory or not?

ப: Yes. It is mandatory.

கே: Whether the A1 Martin Premraj was working with DSP Mr.Ganesan during 16.06.2015 to 19.06.2015?

ப: Yes. Not in full time duty. He was on a shadow duty for the custody accused Mr.Thangavel DSP on shift duty basis.

கே: Have you filed any documents to that effect?

ப: No.

கே: Have you enquired with Mr.Ganesan DSP regarding the special duty as well as the shadow duty during the period 16.06.2015 to 19.06.2015 and Sec.161 of Cr.P.C statement was recorded to that effect?

ப: Yes.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம் மாலை 05.35 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.07.07 18:01:53 +0530